செ.வெ.எண்:44 நாள்:16.10.2017

# பத்திரிக்கைச் செய்தி

**சமூகப்பாதுகாப்புத்துறை**
**மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு அலகு, திருநெல்வேலி**
**உதவியாளர் மற்றும் கணிணி இயக்குபவர் (Data Entry Operator)**

திருநெல்வேலி மாவட்டத்தில் சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழ் செயல்படும் மாவட்டக் குழந்தை பாதுகாப்பு அலகில் உதவியாளர் மற்றும் கணிணி இயக்குபவர் (Data Entry operator) ஒரு வருட ஒப்பந்த அடிப்படையிலான பணியிடம் நேர்முகத்தேர்வு அடிப்படையில் தேர்வு செய்தல் தொடர்பாக தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

காலி பணியிடம்: 1 (ஒன்று)

**கல்வி தகுதிகள்:**

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் கணிணி கல்வியில் பட்டயப் பயிற்சி. கணிணி இயக்குவதில் ஒரு வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும். வயது – 40 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது.

**மாத தொகுப்பூதியம் ரூபாய் 10,000**

**விண்ணப்பிக்க கடைசி நாள்:**

இந்த பதவிக்கு தகுதி உள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் வருகிற அக்டோபர் 30ம் தேதிக்குள் (திங்கள்கிழமை) 5.00 மணிக்குள் வந்து சேரும் வகையில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பங்களை **மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு அலுவலர், மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு அலகு, அரசினர் கூர்நோக்கு இல்ல வளாகம், மேலப்பாளையம் அஞ்சல், திருநெல்வேலி-627005** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். **மேலும் விபரங்களுக்கு 0462-2352953** என்ற தொலைபேசி எண் மூலம் தொடர்பு கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.